**செய்தி வெளியீடு எண்: 414** **நாள்: 18.08.2016**

<u>செய்தி வெளியீடு</u>

ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் சரக்கு போக்குவரத்தை கையாளுபவர்கள் குறித்து தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தின் பயிற்சி

----------

1. தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி நிறுவனம், சென்னை சர்வதேச அளவில் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் சரக்கு போக்குவரத்தை கையாளுபவர் பற்றிய 5 நாள் பயிற்சி முகாம் வரும் செப்டம்பர் 6 முதல் செப்டம்பர் 10 வரை சென்னை, கிண்டி சிட்கோ தொழிற்பேட்டை பார்த்தசாரதி கோயில் தெருவில் அமைந்துள்ள தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி நிறுவனத்தில் அளிக்கப்படவுள்ளது.

2. உலகமயமாக்குதலின் விளைவாக ஏற்றுமதி வர்த்தகத்திற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. இப்பயிற்சியில் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் சரக்கு போக்குவரத்தை கையாளுபவர்களின் கடமை மற்றும் பொறுப்புக்கள் என்ன என்பது பற்றியும் அவர் முகவராக ஏற்றுமதி மற்றும் இறக்குமதியாளருக்கு பாதுகாப்பாகவும் குறைந்த கட்டணத்திலும் சரக்குகளை உரிய இடத்தில் சேர்ப்பிப்பதை எவ்வாறு கையாளவேண்டும் என்பதை பற்றியும் பயிற்றுவிக்கப்படுகிறது. மேலும் இத்துறையில் சிறந்த வேலைவாய்ப்பு மற்றும் சுய தொழில் செய்வதற்கான வாய்ப்புக்கள் பற்றியும் ஆலோசனை வழங்கப்படும்.

3. 18 வயது நிரம்பிய ஆண், பெண் இருபாலரும் பயிற்சியில் சேரலாம். இதற்கான பயிற்சி கட்டணம் ரூபாய் 5000 ஆகும். இப்பயிற்ச்சிக்கான பதிவிற்கும் மற்றும் கூடுதல் விவரங்களுக்கும் தொடர்புக்கொள்ள வேண்டிய தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி நிறுவனத்தின் தொலைபேசி 044–22252081 / 044–22252082 (2) Seawaves Shipping Services கைபேசி எண்கள் 9840342347 / 8939731818.

வெளியீடு: –

**இயக்குநர்,** **செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**